<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண். 343/2022, வா.சா.2.வெள்ளியங்கிரி

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.2 ஆன வெள்ளியங்கிரி என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | வெள்ளியங்கிரி | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | முருகன் | ஜாதி | – | |
| கிராமம் | – | கிருஷ்ணசாமிபுரம் | வயது | – | 58 |
| தாலூக்கா | – | கிணத்துக்கடவு | தேதி | – | 19.11.2025 |

முதல் விசாரணை

நான் கிருஷ்ணசாமிபுரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ.7** | வெள்ளியங்கிரியின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| 2 | 07.02.1989 | **வா.சா.ஆ.8** | முருகனின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| 3 | 26.06.2007 | **வா.சா.ஆ.9** | பழனியம்மாளின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

என்றால் எனது அண்ணன் சண்முகம் இறந்ததற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி எழுதப்பட்டது. அதிலுள்ள விவரங்கள் எனக்குதெரியாது என்றால் தெரியும். இறந்துபோன சண்முகத்தின் தாயார் பெயர் என்ன என்றால் பழனியம்மாள்.அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் 2007 ம் ஆண்டு இறந்துவிட்டார். வாதிகளுக்கு வேண்டியவர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.